2013 மார்ச் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் நீதியின் துணை கொண்டு காவேரியிலிருந்து நாம் பெறவேண்டிய உரிமையைப் பெற்றெடுத்த பொன்னியின் செல்வி அம்மா அவர்களை வணங்குகிறேன். கடைக்கோடிப் பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதியின் காலமநல்லூர் ஊராட்சியிலே ஏறக்குறைய 3,000 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட அந்தப் பகுதியிலே வெள்ளக் காலத்திலே உப்பு நீர் புகாமல் தடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு சென்ற ஆண்டு 2012–2013 இல், 1,200 கோடி ரூபாய் நிதியை அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் இன்றைக்கு என்னுடைய பகுதியிலே அந்த ரெகுலேட்டர் அமைப்பதற்கு வழங்கப்படும் என இந்த நேரத்திலே அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

கால்நடை கிளை நிலையம்

***21537—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, குமராட்சி ஒன்றியம், சிவபுரி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திட்டங்களுக்காக மக்கள் அல்ல, மக்களுக்காகத் திட்டங்கள் என்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய தாரக மந்திரத்திற்கேற்ப தேவைப்படுகின்ற இடங்களிலே அரசின் விதிமுறைக்கேற்ப கால்நடை கிளை நிலையங்களை அமைத்து வருகின்றோம். ஆனால், நம்முடைய உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடுகின்ற சிவபுரி கிராமத்திலே அரசின் விதிமுறைகளுக்கேற்ப அங்கே 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும். அங்கே அந்த அளவுக்கு இல்லாத காரணத்தினால் தற்சமயம் அமைக்க முடியாது. எனினும், வருங்காலத்திலே கால்நடைகள் அதிகமாகின்ற நேரத்திலே அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமராட்சி ஒன்றியம், சிவபுரி கிராமம் என்பது 10 கிராமங்களுக்கு மையமான கிராமமாக இருக்கின்றது. அந்த 10 கிராமங்களிலே இருக்கக்கூடிய கால்நடைகள் அனைத்தும் இங்கே தான் வந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே அங்கு வாரத்திற்கு இரண்டு முறை கால்நடை கிளை நிலையம் செயல்பட்டது. வாரத்திற்கு இரண்டு முறை மருத்துவர் வந்து வைத்தியம் செய்துவிட்டுச் சென்றார். ஆனால், மருத்துவர்கள் பற்றாக்குறையின் காரணமாகவோ என்னவோ தற்சமயம் மருத்துவர்கள் வராமல் விட்டுவிட்டார்கள். ஆகவே, அங்கே மருத்துவர்களும் இல்லை. கால்நடை கிளை நிலையமும் இல்லை என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. எனவே, பக்கத்திலே ஒரு பெரிய பகுதியாக இருக்கின்ற அண்ணாமலை நகர் பேரூராட்சியும் இருக்கின்ற காரணத்தினாலே அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. எனவே, மீண்டும் அந்தக் கால்நடை கிளை நிலையத்தைத் துவக்குவது அந்தப் பகுதி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமென்று கருதி, இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 *மார்ச்* 26]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கால்நடைப் பராமரிப்புத் துறை ஆய்வு செய்து பார்த்ததில் அங்கே 591 கால்நடை அலகுகள்தான் இருப்பதாகத் தெரிய வருவதால், அங்கே தற்சமயம் தொடங்க முடியவில்லை. சிவபுரி கிராமத்திற்கு அருகிலேயே திருவக்குளத்தில் ஒரு கால்நடை கிளை நிலையமும், கவரப்பட்டிலே ஒரு கால்நடை மருந்தகமும், அம்மாப்பேட்டையிலே ஒரு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. அங்கே அளிக்கின்ற சிகிச்சைகளே போதுமானது என்பது என்னுடைய கருத்தாக உள்ளது. இருந்தாலும், எதிர்காலத்திலே அங்கு கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் வாரத்திற்கு இரண்டு முறையாவது மருத்துவர்கள் வந்து அங்கே கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்கு ஏற்பாடு செய்தால் அந்த மக்களுக்கு உதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் வேன்களின்மூலமாக நடைபெற்று வருகின்றன. அந்த அடிப்படையிலே உறுப்பினர் கோருகின்ற கிராமத்திற்கு நடமாடும் கால்நடை மருத்துவமனையை வாரத்திற்கு இரண்டு முறை அனுப்ப ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த எடக்கீழையூர், செருமங்கலம் உள்ளிட்ட பெரிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனைகள் இல்லாததால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றார்கள். கால்நடைகளின் சிகிச்சைக்காக தொலைவில் உள்ள மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். மக்களின் இந்தக் கோரிக்கையை ஏற்று அரசு புதிய கால்நடை மருத்துவமனைகளை அங்கே உருவாக்க முன்வந்தால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மருத்துவமனை கட்டுவதற்கான நிதியை அளிக்கத் தயாராக இருக்கிறேன் என்று நான் உறுதியளிக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கோருகின்ற பகுதிகளிலே அரசின் விதிகளுக்கு உட்பட்டு அங்கே போதுமான அளவுக்கு கால்நடை அலகுகள் இருக்குமென்று சொன்னால், நிச்சயமாக அங்கே கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

71—

சொந்தக் கட்டடம்

***6449—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—